உ
ஸ்ரீ வீரமாகாளி அம்மன் துணை
ஸ்ரீ சுடலை மாடன் சுவாமி துணை






தனந்தரும் கல்விதரும் ஒருநாளும் தளர்வறியா
மனந் தரும் தெய்வ வடிவும் தரும் நெஞ்சில் வஞ்சமில்லா
இனந் தரும் நல்லன எல்லாந் தரும் அன்பர் என்பவருக்கே
கனந் தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே.

தெற்கத்திய நாடார் பங்காளிகள் சங்கத்திற்கு (பதிவு எண்:SRG / Ramanathapuram / 141 / 2021.) தனித்துப் புராதன பாத்தியமான குலதெய்வங்கள்

# ஸ்ரீ வீரமாகாளி அம்மன் - ஸ்ரீ சுடலை மாடன் சுவாமி திருக்கோவில்கள்
# 2023 - ம் ஆண்டு மாசி பாரிவேட்டை & மாசிக்களரி திருவிழா அழைப்பிதழ்

பேரன்புமிக்க பெரியோர்களே!

நிகழும் மங்களகரமான சுபகிருது தமிழ் ஆண்டு, மாசி மாதம், 26–ஆம் தேதி (10–03–2023) வெள்ளிக்கிழமை சுபநாளில் இரவு 7.25 மணிக்கு மேல் குல தெய்வம் ஸ்ரீ வீரமாகாளி அம்மன் திருக்கோவில் பாரிவேட்டை திருவிழா துவங்கும் உற்சவமும், அன்று இரவு 12.05 மணிக்குமேல் குலதெய்வம் ஸ்ரீ சுடலை மாடன் சுவாமி திருக்கோவில் மாசிக்களரி திருவிழா உற்சவமும் தொடங்கி மிகச் சிறப்புடன் நடைபெற உள்ளன என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

திருவிழா அன்று மாசி மாதம் 26–ஆம் தேதி (10–03–2022) வெள்ளிக்கிழமை மாலை 4.35 மணிக்கு மேல் குல தெய்வம் ஸ்ரீ வீரமாகாளி அம்மன் திருக்கோவிலில் திருவிளக்கு பூஜை உற்சவம் நடைபெற உள்ளது. திருவிளக்கு பூஜை உற்சவத்தில் நமது பங்காளிகள் குடும்ப பெண்களும், பிறந்த வீட்டு பெண் பிள்ளைகளும் தாய்மார்களும் கலந்து கொண்டு குலதெய்வம் ஸ்ரீ வீரமாகாளி அம்மன் திருவருள் பெற்று பேரானந்தம் பெருவாழ்வு வாழ்ந்திட வேண்டுகிறோம்.

## குல தெய்வம் ஸ்ரீ சுடலை மாடன் சுவாமி திருக்கோவில் 12 - ம் ஆண்டு வருடாபிஷேக உற்சவம்

நிகழும் மங்களகரமான சுபகிருது தமிழ் ஆண்டு மாசி மாதம் 11– ஆம் தேதி (23–02–2023), வியாழக்கிழமை, உத்திரட்டாதி நட்சத்திரம் சித்தயோகமும், கூடிய சுப தினத்தில் காலை 7.30 மணி முதல் காலை 9.00 மணி வரை குல தெய்வம் ஸ்ரீ சுடலை மாடன் சுவாமி திருக்கோவிலில் 12 ஆம் ஆண்டு வருடாபிஷேக உற்சவ மகா தீப ஆராதனை பூஜை சிறப்பாக நடைபெறுகிறது என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

எனவே நமது குலதெய்வங்கள் திருக்கோவில்களில் நடைபெறும் வருடாபிஷேகம், திருவிளக்கு பூஜை, மாசி பாரிவேட்டை திருவிழா, மாசிக் களரி திருவிழா ஆகிய உற்சவங்களிலும் நமது தெற்கத்திய நாடார் பங்காளிகள் குடும்பத்தினரும், நமது பிறந்த வீட்டுப் பெண் பிள்ளைகள் குடும்பத்தினரும் பக்த கோடிகள் பெருமக்களும் தவறாது கலந்து கொண்டு அருட்பேரானந்தமும் ஆனந்தப்பெருவாழ்வும் பெற்றிட அன்புடன் அழைக்கிறோம்.

**குறிப்பு:** நிகழும் மாசி மாதம் 26 ஆம் தேதி (10-03-2023) வெள்ளிக்கிழமை, திருவிழா நாளில் காலை, மதியம், இரவு உணவு வசதி ஏற்பாடு குல தெய்வம் ஸ்ரீ சுடலை மாடன் சுவாமி திருக்கோவில் வளாகத்தில் செய்யப்பட்டுள்ளது. வெளியூர் பங்காளிகள் குடும்பத்தினருக்கு ஸ்ரீ சுடலை மாடன் சுவாமி திருக்கோவில் வளாகத்தில் தங்கும் வசதி ஏற்பாடும் செய்யப்பட்டுள்ளது.

காலை உணவு 8.30 – 10.00 மணி ★ மதிய உணவு 1.00 – 3.00 மணி ★ இரவு உணவு 7.30 – 10.00 மணி

வெப்சைட் : www.kamuthisudalaimadaswamy.com

**கும்பாபிஷேக திருப்பணி & கும்பாபிஷேகம் & மாசிக்களரி திருவிழா தலைக்கட்டு நன்கொடை**
**தொகை : ரூ. 9000/- அனுப்பி வைக்க வேண்டுகிறோம்**

தலைக்கட்டு வரி மற்றும் அன்னதான நன்கொடை தொகையை அவரவர் வசதிக்கு ஏற்ப விரைவில் நமது சங்கம் பதிவு ஆன்லைன் வங்கி அக்கவுண்டிற்கு அனுப்பி வைக்கவும், அல்லது திருவிழாவிற்கு நேரில் வரும் பொழுதோ அல்லது திருவிழாவிற்கு வர இயலாதவர்கள் திருவிழாவிற்கு வருகை தரும் உறவினர்கள் மூலமோ செலுத்தும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்

Account Name : THERKATHIYA NADAR PANGALIGAL SANGAM
Account Number : 40583868054 | Account type: Current Account
Name of the Bank : State Bank of India | Branch : KAMUTHI Branch
Code: 14203 | IFSC Code : SBIN0014203 | MICR Code : 623002056

(தலைக்கட்டு வரியுடன் அவரவர் விரும்பியபடி தாராளமாக
அன்னதான நன்கொடை தொகையையும் அவசியம் சேர்த்து வழங்க வேண்டுகிறோம்)

வருடாபிஷேக உற்சவ சர்வ சாதகம்:
அர்ச்சகர், ஸ்ரீ பாலசுப்பிரமணியர் திருக்கோவில், அருப்புக்கோட்டை
திரு. R.விஸ்வநாதன் குருக்கள், அவர்கள்

சிறப்பு நாதஸ்வரம்
திரு.ச.செந்தில் முருகன் குழுவினர்
நாதஸ்வர வித்வான்
பல்லாங்கிணறு, விருதுநகர் மாவட்டம்.

இப்படிக்கு
தன. திரவியமணி நாடார், தலைவர், மொபைல்: 9751223123 • C.S.C. சிவமுருகன் நாடார், செயலாளர், மொபைல்: 9842999994 • S.சதீஷ்குமார் நாடார், பொருளாளர், மொபைல்: 9790192133
மற்றும் நிர்வாகக் குழுவினர்

**தெற்கத்திய நாடார் பங்காளிகள் சங்கம்**
ஸ்ரீ வீரமாகாளி அம்மன் கோவில் வளாகம், எண்: 4, ராஜ நாடார் தெரு, கமுதி – 623 603. இராமநாதபுரம் மாவட்டம்

Commercial Printers & Traders, Chennai-33. M.: 9840137463